# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 பங்குனித் திங்கள் 13–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.358/2020 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 05/2026,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 06/2026**

**I. மாரியப்பன் ...மனுதாரர்/வாதி**

**–எதிர்–**

**I. அரிபுத்திரன் ...எதிர்மனுதாரர்/01–ஆம் பிரதிவாதி**

III rd ADJ Court, Salem

இரு மனுக்களிலும் மனுதாரருக்காக வழக்குரைஞர **திரு. K. இராஜசேகரன்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. M. கோவிந்தராஜன்** அவர்களும் தோன்றினர். இரு மனுக்களும் இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்த இவ்விரு மனுக்களிலும் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

### முகவுரை

கூடுதல் சாட்சியம் அளிப்பதற்காக வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் முதல்விசாரணையை மீண்டும் திறக்கக் கோரியும் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைக்கக் கோரியும் இவ்விரு மனுக்களும் முறையே உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழும் 18-ஆம் வகுமுறையின் 17-ஆம் விதியின்கீழும் தாக்கல்செய்யப் பட்டுள்ளன.

## மனுக்களின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். பாகப்பிரிவினை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் மனுதாரர் முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். 04.04.2025-ஆம் தேதியன்று மனுதாரர் வாதி தரப்பு 01 ஆம் சான்றாளராக சாட்சியம் அளித்து முடித்தார். வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்ய வழக்கு பலமுறை ஒத்திவைக்கப் பட்டது. கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண் 03/2025 அனுமதிக்-கப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கூடுதல் வாதுரை நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. கூடுதல் வாதுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானவை. அது சம்மந்தமாக மனுதாரர்/வாதி கூடுதல் சாட்சியம் அளிப்பது அவசியமாக இருக்கிறது. ஆகையால், வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் முதல்விசாரணையை மீண்டும் திறந்து வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைத்து ஆணையிட வேண்டும்.

## எதிருரைகளின் சுருக்கம்

02. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்துள்ள கூடுதல் வாதுரையில் உண்மையான சங்கதிகளே சொல்லப்பட்டுள்ளன. அந்தச் சங்கதிகளை மறுத்துக் கூடுதல் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. மனுதாரர்/வாதி வேண்டுமென்றே இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இந்த மனுக்களை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

03. இவ்விரு மனுக்களும் அனுமதிக்கத்தக்கனவா?

**தீர்முடிவு**

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் 26.03.2025-ஆம் தேதியன்று சாட்சியம் அளித்து அவரது முதல்விசாரணை 04.04.2025-ஆம் தேதியன்று நிறைவடைந்து இருக்கிறது. 21.04.2025-ஆம் தேதியன்றுமுதல் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு-விசாரணை செய்வதற்காக வழக்கு பலமுறை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிக்காக ஏற்கனவே தோன்றியிருந்த வழக்குரைஞருக்குப் பதிலாக மற்றொரு வழக்குரைஞர் 02.07.2025-ஆம் தேதியன்று வழக்குரை அதிகார ஆவணம் தாக்கல்செய்துள்ளார். கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வேண்டும் என்று 14.02.2025-ஆம் தேதியன்று பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண் 03/25 ஆனது 29.08.2025-ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது. அதற்கு மறுப்புரை தெரிவிக்க வேண்டும் என்று வாதி தரப்பில் தாக்கல் செய்த வழக்கிடை விண்ணப்ப எண் 04/25 ஆனது 21.01.2026-ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது. அதன் பிறகு கூடுதல் வாதுரைகளுக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

05. கூடுதல் வாதுரைகள் தாக்கல்செய்யப்படும்முன் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதில் கூடுதல் வாதுரைகளில் கண்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்திருக்க

வாய்ப்பில்லை. கூடுதல் வாதுரைகள் சம்மந்தமாக கூடுதல் சாட்சியமளிக்க மனுதாரர்/வாதிக்கு வாய்ப்பு வழங்குவது அவசியம். இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித அநீதியும் விளையாது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

## இறுதிமுடிவு

06. இறுதியாக, இவ்விரு மனுக்களும் அனுமதிக்கப்படுகின்றன. அவரவர் செலவுத்தொகையை அவரவர ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 27–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V
Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.27 19:43:37 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

III ra ADJ Court, Salem

**இணைப்பு:–** இல்லை